## சுருக்கம்

சொத்து வரி – தர்மபுரி நகராட்சி – தர்மபுரி நகராட்சி பகுதிகளுக்குட்பட்ட கட்டிடங்களுக்கான சொத்து வரி – மறு நிர்ணயம் – ஆணை வெளியிடப்படுகிறது.

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நசி4) துறை**

**அரசாணை (நிலை) எண். 18** நாள் :13.02.2008

**படிக்க :**

1) தலைவர், தர்மபுரி ஏ.எஸ்.டி.சி.நகர் போக்குவரத்து பணியாளர்கள் குடியிருப்போர் நலச் சங்கம், மனு நாள் 8.8.2001
2) ரிட் மனு எண்.25856/03 ல் சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பு நாள் 17.9.2003
3) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் எண்.61321/2007/R1 நாள் 26.9.2007

**ஆணை :**

முதலாவதாகப் படிக்கப்பட்ட தர்மபுரி ஏ.எஸ்.டி.சி.நகர் போக்குவரத்து பணியாளர்கள் குடியிருப்போர் நலச்சங்க தலைவரின் 8.8.2001 நாளிட்ட மனுவில், தங்கள் குடியிருப்பு பகுதி பஞ்சாயத்தாக இருந்து நகராட்சியுடன் இணைக்கப்பட்டதாகவும், தங்கள் பகுதி நகராட்சி எல்லை முடியும் பகுதியில் உள்ளது என்றும், எனினும் தங்களது பகுதி “ஏ” மண்டலமாக கருதப்பட்டு சொத்துவரி விதிக்கப்படுள்ளது என்றும், எனவே தங்கள் பகுதியின் சுற்றுப்புறச் சூழல்களை கண்டறிந்து, தங்களது பகுதியை “சி” மண்டலமாக மாற்றி அதற்கு தகுந்தவாறு சொத்துவரி விதிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2) ஏ.எஸ்.டி.சி. நகர் போக்குவரத்து பணியாளர்கள் குடியிருப்போர் நல சங்கம் சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட்மனு எண்.25856/03 மற்றும் 31713/03–ல் தொடர்ந்த வழக்குகள் மீது சென்னை உயர்நீதிமன்றம் 17.9.2003 அன்று வழங்கிய இரண்டாவதாக படிக்கப்பட்ட தீர்ப்பில், ஏ.எஸ்.டி.சி. போக்குவரத்து கழக பணியாளர்கள் குடியிருப்போர் சங்க தலைவரின் 8.8.2001 நாளிட்ட மனுவினை 4.2.2000 மற்றும் 31.12.2001 நாளிட்ட தர்மபுரி நகர்மன்ற தீர்மானங்களின் அடிப்படையில் ஆராய்ந்து உத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

3) தர்மபுரி நகர்மன்ற தீர்மானம் எண். 543 நாள் 4.2.2000–ல் “சொத்துவரி திருத்தம் நகர்மன்றம் பரிசீலித்து தீர்மானிக்க மன்றத்திற்கு அனுமதி வழங்க அரசைக் கேட்டுக் கொள்ளலாம்” என்றும், தீர்மானம் எண்.241 நாள் 31.12.01–ல் “தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக குடியிருப்பு பகுதிகள் நகர்மன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் சொத்துவரி நடப்பு

ஆண்டு வரை செலுத்தவும் 1.4.2002 முதல் "சி" மண்டலமாக மாற்றலாம்" எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

4) தற்போது தர்மபுரி நகராட்சியில் "ஏ" மண்டலத்திற்கு சதுர அடிக்கு ரூ.2.20–ம், " பி " மண்டலத்திற்கு சதுர அடிக்கு ரூ.1.90–ம் "சி " மண்டலத்திற்கு சதுர அடிக்கு ரூ.1.00–ம் சொத்துவரியாக விதிக்கப்படுகிறது.

5) தர்மபுரி நகராட்சி பகுதிகளுக்கான சொத்துவரி குறித்து மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அளித்துள்ள அறிக்கையில், இப்பொருள் குறித்து ஆய்வு செய்ய இணை ஆணையர் (நிர்வாகம்) , நிதி ஆலோசகர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் சேலம் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டது என்றும் அக்குழு 25.8.07 அன்று தர்மபுரி [redacted] தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், தர்மபுரி நகராட்சி நகர்மன்ற தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்து கருத்துக்களை கேட்டறிந்து 14.9.07 அன்று விரிவான அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்ததாகவும், அவ்வறிக்கையில் , தர்மபுரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், தர்மபுரி நகர்மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தற்போதைய வரித் தொகையை ஏ, பி, சி, மண்டலங்களுக்குள்ள சொத்துவரி முறையே சதுர அடிக்கு ரூ.2.20, ரூ.1.90, ரூ.1.00–லிருந்து ரூ.0.80, ரூ.0.60 மற்றும் ரூ.0.35 என்று மறு நிர்ணயம் செய்யலாம் என கருத்து தெரிவித்ததாகவும் , மேலும் ஆய்வின்போது 1.10.98–க்கு முன்பு விதிக்கப்பட்டுள்ள சொத்து வரியை காட்டிலும் தற்போதைய சொத்து வரி 5 லிருந்து 10 மடங்கு அதிகமானதாக கண்டறியப்பட்டதாகவும் குறிப்பிட்டு அக்குழு கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

i) நீதிமன்ற உத்தரவினை செயல்படுத்தும் வகையிலும், தர்மபுரி மாவட்டநீதி மன்றம் 47 வழக்கில் வழங்கிய தீர்ப்புகளின் அடிப்படையிலும் நகராட்சிக்கு அதிக வருவாய் இழப்பில்லாமல் "ஏ,பி,சி மண்டலங்களுக்கான சொத்துவரியினை கீழ்க்கண்டவாறு மறுநிர்ணயம் செய்யலாம்"

"ஏ" மண்டலம் சதுர அடிக்கு ரூ.1.10 தற்போதைய வரியில் 50%

"பி" மண்டலம் சதுர அடிக்கு ரூ.0.90 தற்போதைய வரியில் 47.37%

"சி" மண்டலம் சதுர அடிக்கு ரூ.0.50 தற்போதைய வரியில் 50%

இவ்வாறு சொத்துவரி மறுநிர்ணயம் செய்யப்படுவதால் 1.10.98 முதல் 31.3.07 வரை நகராட்சிக்கு ரூ.116.00 இலட்சங்கள் வருவாய் இழப்பீடு ஏற்படும். எதிர்காலத்தில் ஆண்டொன்றிக்கு தோராயமாக ரூ.42.62 இலட்சங்கள் வருவாய் இழப்பீடு ஏற்படும்.

ii) "சி" மண்டலத்தின் தற்போதைய வரி தொகை சதுர அடிக்கு ரூ.1.00 என உள்ளதை சதுர அடிக்கு ரூ.0.50 என மறுநிர்ணயம் செய்வதால் ஏ.எஸ்.டி.சி. போக்குவரத்து பணியாளர்கள் குடியிருப்பு பகுதியினை 31.12.01 நாளைய தீர்மானத்தின் படி "ஏ" மண்டலத்திலிருந்து "சி" மண்டலமாக மாற்ற வேண்டிய அவசியமில்லை.

iii) "பி" மண்டலத்திற்கான தற்போதைய வரி சதுர அடிக்கு ரூ.1.90 என உள்ளதை சதுர அடிக்கு ரூ.0.90 என மறு நிர்ணயம் செய்வதால் நகர்மன்ற தீர்மானம் எண்.314 நாள் 29.1.2002-ல் தீர்மானித்தவாறு 10 தெருக்களை "ஏ" மண்டலத்திலிருந்து "பி" மண்டலமாக மாற்ற வேண்டிய அவசியமில்லை.

மேற்சொன்ன குழுவின் அறிக்கை குறித்து அக்குழுவினருடன் கலந்துரையாடியதாகவும், அதன் பின்பு அவ்வறிக்கையினை ஏற்கலாம் என கருதியுள்ளதாகவும் தெரிவித்து , தர்மபுரி நகராட்சியில் 'ஏ', 'பி', 'சி' மண்டலங்களுக்கான தற்போதைய சொத்துவரிகளை முறையே சதுர அடிக்கு ரூ.2.20, ரூ.1.90 மற்றும் ரூ.1.00 என்பதிலிருந்து சதுர அடிக்கு ரூ.1.10, ரூ.0.90, ரூ.0.50 என மறு நிர்ணயம் செய்து ஆணை வெளியிடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6) நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையை அரசு நன்கு ஆராய்ந்தது. ஆய்வின் முடிவில், தர்மபுரி நகராட்சியில் 1.10.1998 முதல் கீழ்க்கண்டவாறு சொத்துவரி மறு நிர்ணயம் செய்யலாம் எனக் கருதி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது .

| மண்டலம் | தற்போதைய வரி (சதுர அடிக்கு) | மறு நிர்ணயம் செய்யப்படும் வரி(சதுர அடிக்கு) |
|---|---|---|
| 'ஏ' | ரூ.2.20 | ரூ.1.50 |
| 'பி' | ரூ.1.90 | ரூ.1.25 |
| 'சி' | ரூ.1.00 | ரூ.0.80 |

மேலும் மேற்சொன்ன சொத்துவரி திருத்தம் குறித்து தர்மபுரி நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

7) இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.68678/நநி(ம)குவ/07 நாள் 15.11.07ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.
ஆணையர், தர்மபுரி நகராட்சி (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
நகல்
முதலமைச்சர் அலுவலர், சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
நநி(ம)குவ துறை செயலரின் தனிச் செயலர், சென்னை-9
நநி(ம)குவ(அந2) துறை
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.
13/2/08